ஸ்ரீ ஹரி:

பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை



'ப்ருந்தாவனம்' யமுனை நதி தீரத்தில், நம் ஸ்வாமிகள், கீர்த்தனம் செய்யும் காட்சி.

வேணு : 3 | மே 1998 | கானம் : 10

ஸ்ரீ ஹரி:

## பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்

# மதுரமுரளி

(தெய்வீக மாதப் பத்திரிகை)

வேணு : 3 | மே 1998 | கானம் : 10

## விஷய ஸூசிகை

பக்கம்



| | | |
|---|---|---|
| 1. | ஸ்ரீ ஸ்வாமிகளின் கீர்த்தனம் | 3 |
| 2. | மதுரமான மஹனீயர் - 30 | 5 |
| 3. | கோபிகா கீதம் - தொடர்ச்சி | 9 |
| 4. | நக்ஷத்ரங்களின் பெருமைகளும், விளக்கங்களும் - 11 | 12 |
| 5. | பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிகள் அளித்த பதில்கள் - தொடர்ச்சி | 14 |
| 6. | வேத கதைகள் - 12 | 16 |
| 7. | ஸ்ரீ நாரத பக்தி ஸூத்ரம் - 4 | 18 |
| 8. | சாந்தோக்யபநிஷத் | 22 |
| 9. | பாலகர்களுக்கு ஒரு கதை - 7 | 27 |
| 10. | ஸ்ரீ ஸ்வாமிகளின் ஸம்பாஷணைகளிலிருந்து - 33 | 29 |
| 11. | செய்திகள் | 32 |
| 12. | நடக்க இருக்கும் நிகழ்ச்சிகள் | 32 |



'ப்ருந்தாவனம்' யமுனை நதி தீரத்தில் கீர்த்தனத்திற்கு,
நம் ஸ்வாமிகள் அநுகரணம் செய்கிறார்.

ஸ்ரீ ஹரி:

# ஸ்ரீ ஸ்வாமிகளின் கீர்த்தனம்

ராகம் : யமுனா கல்யாணி தாளம் : ஆதி

பல்லவி

*த்வமேவ குதூஹல கேளீ - க்ருஷ்ண*
*அஹமேவ கோலாஹல தாஸீ* *(த்வமேவ)*

சரணங்கள்

*ஸ்ரீவனமேவ மமவாஸம் - தவ*
*நானாவித ஸ்மரணம் மம ஜீவனம்* *(த்வமேவ)*

*அதிஅதி ஸுந்தரம் தவரூபம்*
*பதிபதி லுண்டித ததிபாண்டம்* *(த்வமேவ)*

*ராதே ராதே இதி மம கீதம்*
*பதே பதே போக்யம் தவ சரிதம்* *(த்வமேவ)*

*தினே தினே திவ்யம் தவ தாஸ்யம்*
*க்ஷணே க்ஷணே ஶாந்தம் தவ த்யானம்* *(த்வமேவ)*

*நவ நவ நூதனா தவலீலா*
*பவ, பவபஞ்ஜனம் தவ நாம* *(த்வமேவ)*

*குஹு குஹு கூஜதி தவ வேணு:*
*பஹு பஹு மதுரம் தவ முரளீ* *(த்வமேவ)*

அறிவிப்பு : ''ஸ்ரீ குருஜியின் கீர்த்தனங்கள்'' அடங்கிய காஸெட்டுகள் இரண்டு பாகங்கள் வெளி வந்துள்ளன.



'ப்ருந்தாவனம்' யமுனை நதிக்கரையில் வஸந்தோத்ஸவத்தில்
ஸ்ரீ பெருமாள் புறப்பாட்டில், நம் ஸ்வாமிகள்

வெகு நாளாகவே நம்முடைய ஸ்வாமிகள், ஸ்ரீவனத்தில், அதாவது ப்ருந்தாவனத்தில் ப்ரஹ்மோத்ஸவத்தை நடத்த வேண்டும் என்று ஆசைப்பட்டு வந்தார். இந்த வருடம், ப்ரேமிக வரதனுடைய வஸந்தோத்ஸவம் ஸ்ரீவனத்தில் நடத்த தீர்மானிக்கப்பட்டு அதன்படி நடந்தேறியது.

சுமார் நூறு பக்தர்கள் சென்னையிலிருந்து கிளம்பி ப்ருந்தாவனத்தை அடைந்தனர். நம் ஸ்வாமிகள், சென்னையிலிருந்து கிளம்பி, பெங்களூர், ஹம்பி, ஹாஸ்பெட், பண்டர்பூர், இந்தோர் வழியாக ப்ருந்தாவனம் வந்தடைந்தார். நாங்கள் அனைவரும் ஏப்ரல் 2-ந் தேதி இரவு கிளம்பி 4-ந் தேதி காலையில் ஸ்ரீவனத்தை அடைந்தோம்.

4-ந் தேதி அன்று மாலை, ஸ்வாமிகள் எங்களையெல்லாம் ஸ்ரீ க்ருஷ்ணனுடைய லீலா ஸ்தானங்களான *வம்வட், நிதிவனம், ஸேவாகுஞ்சம், ப்ரஹ்ம குண்டம்* முதலிய இடங்களுக்கும், ரங்கஜி மந்திர், கோபேஸ்வரர் மந்திர், கோவிந்த் மந்திர் போன்ற இடங்களுக்கும் அழைத்துச் சென்று தர்சனம் செய்வித்தார்.

5-ந் தேதி - அன்று ஸ்ரீ ராம நவமி - காலையில் அனைவரும் ''*ரங்கேச மாம்பாஹி, ரங்கேச மாம்பாஹி*'' என்று சொல்லிக் கொண்டு யமுனை நதியில் ஸ்நானம் செய்யச் சென்றோம். ஸ்நானம் முடிந்து திரும்பி வரும்பொழுது விஷ்ணு ஸஹஸ்ரநாமம் சொல்லிக் கொண்டு வருவோம். அன்று முதல், ''பாகவத ஸப்தாஹ பாராயணம்'' ஆரம்பிக்கப்பட்டு பாராயணம் செய்யப்பட்டது.

ஸ்ரீ ராம நவமியை முன்னிட்டு பெருமாளுக்கு விசேஷ திருமஞ்சனம் செய்யப்பட்டு ஸ்ரீமத் ராமாயணத்தில் ''ஸ்ரீராம அவதார படலம்'' பாராயணம் செய்யப்பட்டது. பானகம், நீர் மோர், விசிறி முதலியவை தரப்பட்டன. வரதானம் செய்யப்பட்டது. அன்று மாலை 4 மணிக்கு, யமுனை கரையில், பெருமாள் புறப்பாடு கண்டருளினார். மாலையில் அனைவரும் சேர்ந்து விஷ்ணு ஸஹஸ்ரநாமம் சொல்வோம். சிறிது நேரம் ''ஹரே ராம'' சொல்வோம். பிறகு ஒரு மணி நேரம் கதா ஶ்ரவணம் செய்வோம். இரவு திவ்ய நாம ஸங்கீர்த்தனம் செய்வோம்.



ப்ருந்தாவனத்தில், நமது மிஷனுக்குச் சொந்தமான
'ஸ்ரீ நிகேதனம்' இடத்தில், ஸ்ரீ ஸ்வாமிகள் 'கோ பூஜை' செய்கிறார்.

6-ந் தேதி காலை 4 மணிக்கு, ஸ்வாமிகள் எங்களையெல்லாம் அழைத்துக் கொண்டு *ப்ருந்தாவன பரிக்ரமா* சென்றார். காலையில் பாகவத பாராயணம், மாலையில் புறப்பாடு, ஸஹஸ்ரநாமம், கதா ஶ்ரவணம், நாம ஸங்கீர்த்தனம் முதலியவை 5-ந்தேதி போலவே நடைபெற்றன.

7-ந் தேதி - ஏகாதஶீ - அன்று நம் ஸ்வாமிகள், ப்ருந்தாவனத்தில் கோவில் கட்டுவதற்காக வாங்கியுள்ள *"ஸ்ரீ நிகேதனம்"* என்ற இடத்தில் பெருமாளுக்கு திருமஞ்சனம் கண்டருளப்பட்டது. அன்று ஏகாதஶீயாதலால் ஸ்வாமிகள் எங்களை அழைத்துச் சென்று ப்ராசீன மூர்த்தியான *பாங்கே விஹாரியை* தரிசனம் செய்து வைத்தார். அன்று இரவு சுமார் 9 மணியளவில் பரனூர் மஹாத்மா ஸ்ரீ ஸ்ரீ க்ருஷ்ண ப்ரேமி ஸ்வாமிகள் அவர்களால் நிர்மானிக்கப்பட்ட 'ப்ரேம மாதுரீ நிகுஞ்சத்'தில் திவ்யநாமம் நடைபெற்றது.

8-ந் தேதி - த்வாதஶீ - அன்று காலையில் பாரணையை முடித்துக் கொண்டு *க்ருஷ்ண ஜன்மஸ்தான், கோகுலம் தரிசனம்* செய்து வந்தோம்.

க்ருஷ்ண ஜன்மஸ்தானத்தில் பகவானின் அவதார கட்டம் பாராயணம் செய்யப்பட்டது. மாலையில் வழக்கம் போல் ஸஹஸ்ரநாமம், புறப்பாடு, கதா ஶ்ரவணம், நாம கீர்த்தனம் நடைபெற்றன.

9-ந் தேதி, கோபிகைகள் எந்த காத்யாயனியிடம் வ்ரதம் இருந்து பூஜித்தார்களோ அந்த காத்யாயனியை தரிசனம் செய்து *பர்ஷானா, நந்த காங்வ், கோவர்த்தன்* முதலான இடங்களுக்குச் சென்று தரிசனம் செய்து வந்தோம். மாலையில் வழக்கம் போல் நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

10-ந் தேதி காலையில் பாகவத பாராயணம் முடிந்தவுடன் ஸம்ப்ரதாய பஜனை ஆரம்பிக்கப்பட்டது. மாலையில் வழக்கமான நிகழ்ச்சிகளுடன் *சார்* ஸம்ப்ரதாயப்படி *பராதி* (மாப்பிள்ளை அழைப்பு) பெருமாள் குதிரையில் புறப்பாடு செய்யப்பட்டார். Band வாத்யத்துடனும், நாம ஸங்கீர்த்தனத்துடனும் ஸ்ரீ வன வீதிகளில் புறப்பாடு செய்யப்பட்டார். பிறகு மாலை மாற்றுதல், ஊஞ்சல் இவை பெருமாளுக்கு கண்டருளப்பட்டன.

பிறகு அஷ்டபதிகள் பாடப்பட்டு இரவு 12 மணி வரை தொடர்ந்து 6-வது அஷ்டபதி வரை பாடப்பட்டது.

11-ந் தேதி காலையில், பாகவத பாராயணம் பூர்த்தியாகி கலஶ தீர்த்தத்தினால் பெருமாளுக்கு திருமஞ்சனம் செய்யப்பட்டது. 'கீத கோவிந்த மஹா காவ்யம்' பாடப்பட்டு பூர்த்தியாகிய பிறகு, திவ்யநாம ஸங்கீர்த்தனம் ஸம்ப்ரதாயமாக நடைபெற்றது. பிறகு 'சூர்ணிகை லக்னாஷ்டகம்' பாடப்பட்டு பெருமாளுக்கும் தாயாருக்கும் மாங்கல்ய தாரணம் செய்வித்தபிறகு ராதா கல்யாண மஹோத்ஸவம் இனிதே பூர்த்தியாகியது.

அன்று இரவு சுமார் 8 மணியளவில், யமுனைக்கரையில், பெருமாள் புறப்பாடு கண்டருளினார். யமுனைக்கரையில் பூர்ணமான நிலவொளியில் சில கீர்த்தனங்களுக்கு நம் ஸ்வாமிகள் அநுகரணம் செய்வித்தது மிகவும் பாவத்துடன் இருந்தது.

12-ந் தேதி காலையில் யமுனைக் கரையில், பெருமாள் தீர்த்தவாரி கண்டருளினார். இவ்விதமாக வஸந்தோத்ஸவம் இனிதே பூர்த்தியாகியது. நாங்கள் அனைவரும் சென்னை திரும்பினோம்.

நமது ஸத்ஸங்கத்தைச் சேர்ந்த பாஷ்யம் ஐய்யங்கார், டில்லி குமார் போன்றவர்கள் நிர்வாக பொறுப்பை ஏற்றுக் கொண்டு எல்லா வஸதிகளையும் செய்து கொடுத்தார்கள்.

அநேக இடங்களில், குருவானவர் மாத்திரம் பகவத் விஷயத்தில் ஈடுபட்டிருப்பார். மற்றவர்கள் அனைவரும் தூங்கிக் கொண்டும், ஊர் வம்பு, கதைகளை பேசிக் கொண்டுமிருப்பதுண்டு. ஆனால், நம் ஸங்கத்திலோ அனைவரும் கைங்கர்யம், கீர்த்தனம், பாராயணம் இவைகளில் முழுமையாக கலந்து கொண்டது தனி அம்சமாகும்.

ராதா கல்யாணத்தன்று காலையில் மல்லிகார்ஜுன சர்மா ஸோமயாஜி அவர்கள் உஞ்சவிருத்தி எடுத்தார். ப்ரதி வருடமும் இதே காலத்தில், ப்ருந்தாவனத்தில் ஒரு ஸப்தாஹம் நடத்த ப்ருந்தா தேவி அனுக்ரஹிக்க வேண்டும் என்று நம் ஸ்வாமிகள் ப்ரார்த்தித்துக் கொண்டார்.

(தொடரும்)

**- ஜயந்தி ஜானகிராமன்**

# கோபிகா கீதம் - (தொடர்ச்சி)

(ஸ்ரீமத் பாகவதம், பத்தாவது ஸ்கந்தம், 31-வது அத்யாயம்)

*சலஸி யத்வ்ரஜாத் சாரயன் பஶூன்*
*நளின ஸுந்தரம் நாத தே பதம் ।*
*ஶிலத்ருணாங்குரை: ஸீததீதி ந:*
*கலிலதாம் மன: காந்த கச்சதி॥* 11

*தினபரிக்ஷயே நில குந்தலை:*
*வனருஹானனம் பிப்ரதாவ்ருதம் ।*
*கனரஜஸ்வலம் தர்ஶயன் முஹு:*
*மனஸி ந: ஸ்மரம் வீரயச்சஸி ॥* 12

*ப்ரணத காமதம் பத்மஜார்சிதம்*
*தரணி மண்டநம் த்யேயமாபதி ।*
*சரண பங்கஜம் ஶந்தமஞ் ச தே*
*ரமண ந: ஸ்தனேஷு அர்பயாதிஹந் ॥* 13

*ஸுரதவர்தனம் ஶோகநாஶநம்*
*ஸ்வரிதவேணுநா ஸுஷ்டுசும்பிதம்।*
*இதரராக விஸ்மாரணம் ந்ருணாம்*
*விதர வீர ந: தேऽதராம்ருதம்॥* 14

*அடதி யத்பவான் அஹ்நி கானனம்*
*த்ருடிர்யுகாயதே த்வாமபஶ்யதாம் ।*
*குடில குந்தளம் ஸ்ரீமுகஞ் ச தே*
*ஜட உதீக்ஷதாம் பக்ஷ்மக்ருத்த்ருஶாம் ॥* 15

*பதிஸுதாந்வய ப்ராத்ரு பாந்தவான்*
*அதிவிலங்க்ய தே அந்த்யச்யுதாகதா: ।*
*கதிவிதஸ்தவ உத்கீதமோஹிதா:*
*கிதவ யோஷித: கஸ்த்யஜேன்நிஶி ॥* 16

*ரஹஸி ஸம்விதம் ஹ்ருச்சயோதயம்*
*ப்ரஹஸிதானனம் ப்ரேம வீக்ஷணம் ।*
*ப்ருஹதுர: ஶ்ரியோ வீக்ஷ்ய தாமதே*
*முஹுரதிஸ்ப்ருஹா முஹ்யதே மன: ॥* 17

*வ்ரஜவநௌகஸாம் வ்யக்திரங்கதே*
*வ்ருஜினஹந்த்ர்யலம் விஶ்வமங்களம் ।*
*த்யஜ மனாக் ச ந: த்வத்ஸ்ப்ருஹாத்மனாம்*
*ஸ்வஜன ஹ்ருத்ருஜாம் யந்நிஷூதநம் ॥* 18

*யத்தே ஸூஜாத சரணாம்புருஹம் ஸ்தனேஷு*
*பீதா: ஶனை: ப்ரிய **ததீ**மஹி கர்கஶேஷு ।*
*தேனாடவீமடஸி தத்வ்யததே ந கிம்ஸ்வித்*
*கூர்பா**தி**பி: ப்ரமதி **தீ**ர்பவதாயுஷாம் ந: ॥* 19

ஹே நாத! நீர் கோகுலத்திலிருந்து பசுக்களை மேய்ப்பதற்கு புறப்படுகிறீர். அதனால், தாமரை போன்ற ம்ருதுவான உமது சரணம், சிறு கற்களாலும், புற்களின் நுனிகளாலும், துன்புறுத்தப்படுமே என்று எங்கள் மனது கலங்குகிறது.

நீர், மாலை வேளையில் கறுத்த முன் நெற்றி முடியினால் சூழப்பட்டதும், அதிகமான கோ தூளியினால் மறைக்கப்பட்டதுமான தாமரை போன்ற முகத்தைத் தரித்துக் கொண்டும், அடிக்கடி காண்பித்துக் கொண்டும் எங்கள் மனதில் காமத்தை உண்டாக்குகிறீர்.

ஹே க்ருஷ்ண! வேண்டியதைத் தருவதும், ப்ரஹ்ம தேவனால் பூஜிக்கப்பட்டதும், ஆபத் காலத்தில் த்யானிக்கக்கூடியதும், ஸேவித்த மாத்திரத்தில் ஆனந்தத்தைத் தருவதுமான உமது சரண கமலத்தை எங்களுடைய ஸ்தனங்களில் வைக்க வேண்டும்.

ஹே வீர! காமத்தை வ்ருத்தி செய்வதும், ஶோகத்தை போக்குவதும், ஸப்திக்கின்ற வேணுவினால் நன்கு முத்தமிடப்பட்டதும், வேறு ஆசைகளை மறக்கச் செய்வதுமான உமது அதராம்ருதத்தை எங்களுக்கு அருள வேண்டும்.

நீர் ப்ருந்தாவனத்திற்குப் போகும்பொழுது, உன்னைக் காணாமல் இருக்கும் அரை க்ஷணமானது, ஒரு யுகம் போல் ஆகிறது. ஸாயங்காலத்தில், வளைந்த முன்னெற்றி முடிகளுடன் கூடியிருக்கும் ஸ்ரீமுகத்தை நிமிர்ந்து பார்க்கின்ற எங்களுடைய கண்களுக்கு இமையைச் செய்த ப்ரஹ்மா ஜடமாவார்.

அச்யுத! உனது கானத்தால் மோஹத்தை அடைந்தவர்களாகி, பதி, புத்ரன், குலம், உடன் பிறந்தவர்கள், பந்துக்கள் இவர்களை மீறி, நீயே கதியென்று வந்திருக்கிறோம். தன்னை அண்டிய ஸ்த்ரீயை நடுநிசியில் கைவிடுவார்களா? (ஆகையால் எங்களை கைவிடாதே).

காமத்தைக் கொடுக்கும் உனது ஸங்கேத பாஷைகளையும், புன்சிரிப்புள்ள முகத்தையும், ப்ரியமான பார்வையும், லக்ஷ்மீ தேவிக்கு இருப்பிடமான உனது அகன்ற மார்பையும், நினைத்து எங்கள் மனமானது அதிக ஆவல் கொண்டு அடிக்கடி மோஹத்தை அடைகிறது.

ஹே அங்க! உனது ஸ்வரூபமானது, கோகுலத்திலுள்ள ப்ராணிகளுக்குப் பாபத்தைப் போக்குகிறதாகவும், உலகுக்கு மிகுந்த மங்களத்தைச் செய்வதாகவும் இருக்கிறது. உம்மிடம் ஆசையுள்ளவர்களான எங்களுடைய ஹ்ருதய தாபத்திற்கு நிவ்ருத்தியைத் தருகின்ற மருந்து எதுவோ அதைக் கொஞ்சம் தர வேண்டும்.

ஹே ப்ரிய! உமது எந்த சரணாரவிந்தத்தைக் கடினமான எங்களது ஸ்தனங்களில் வைத்தால் நோகுமோ என்று பயந்து மெள்ள வைத்துக் கொள்வோமோ அப்படிப்பட்ட பாதங்களினால் வனத்தில் சுற்றுகிறாயே. சின்ன கற்களினால் அந்த சரணம் நோகுமோ என்று உன்னையே உயிராகவுடைய எங்களுடைய புத்தியானது கலங்குகிறது. ■

---

அறிவிப்பு :

1. பகவான் ஸ்ரீரமண மஹரிஷியின் ''அருணாசல அக்ஷர மணமாலை'' ஸ்ரீ குருஜியின் உபன்யாஸ கேஸட்டுகள் - மூன்று பாகங்கள் வெளிவந்துள்ளன.
2. மதுரமுரளி July '95 - June ' 97 இரண்டாண்டு இதழ்கள், இரண்டு பாகங்களில் Bind செய்யப்பட்டு வெளிவந்துள்ளன.
3. மதுரமுரளி மூன்றாம் ஆண்டு இதழ்கள் July '97 - June ' 98 தனி பாகமாக வெளிவர உள்ளது.

இவை சென்னை ப்ரேமிக பவனில் கிடைக்கும்.

# நக்ஷத்ரங்களின் பெருமைகளும், விளக்கங்களும் - 11

- நித்யக்னிஹோத்ரி ப்ரஹ்மஸ்ரீ
A. சுந்தரேச ஸர்மா வாஜபேயயாஜி

## ஹஸ்தம்

ஸவிதா என்பதை தேவதையாகக் கொண்ட நக்ஷத்ரம் இது. ஸவிதாவை ஸூர்யன் என்றும் கொள்ளலாம். ஹஸ்தம் உயர்வான நக்ஷத்ரமாகும். ஹஸ்தத்தில் பிறந்த பிள்ளை தாயார்க்கு ஆரோக்ய குறைவு கொடுப்பான் என்றுள்ளது. இதற்கு ஹஸ்த நக்ஷத்ர ஜனன சாந்தி செய்து விடுவதால் அந்த தோஷம் பரிஹாரமாகிவிடும். இல்லையெனில் நிஸ்சயம் ஏதோ ஒரு விதத்தில் தாயார் பாதிக்கப்பட்டிருக்கிறாள் என்பது அனுபவ பூர்வ உண்மை. ஆனால், அந்த பிள்ளை மேன்மையை அடைவது நிச்சயம்.

ஹஸ்த நக்ஷத்திரம் ஆகாயத்தில் ஐந்து நக்ஷத்திரங்களாக ப்ரகாசிக்கின்றதாகச் சொல்லப்படுகிறது. இதன் உருவம் மூன்று விதமாக தெரியலாம். காதில் அணியும் டோலக் போன்றதாகவோ, ஜால்ரா போன்றோ, ஐந்து விரல்கள் போன்றோ தெரியும் என்று கூறப்படுகிறது. ஆனி மாதம் 8-ந் தேதி முதல் 20-ந் தேதி வரை மாலை 6 மணிக்கு இது தலைக்கு நேராகத் தெரியும். இந்த ஸவிதா என்கிற தேவதை, ஏழு குதிரைகள் பூட்டிய ஒரு சக்கரம் கொண்ட ரதத்தில் பத்மாஸனத்தில் அமர்ந்திருப்பதாக கூறப்பட்டுள்ளது. இந்த தேவதைக்கான யாகத்தில் விசேஷமான ஹவிஸ் கூறப்பட்டுள்ளது. அதாவது சீக்கிரமாக விளையக்கூடிய நெல்லைக் கொண்டு அரிசியாக்கி புரோடாசம் செய்து யாகம் செய்ய வேண்டும். தற்சமயம், விதைப்பதிலிருந்து 90 நாட்களில் விளையும் அரிசி என வைத்துக் கொள்ளலாம்.

இது கன்னி ராசிக்குரிய நக்ஷத்ரமாகும். இந்த நக்ஷத்ரத்தில் பிறந்தவர்கள், மிக மென்மையானவர்கள். தன் கடமைகளை காலந்தவறாமல் செய்வதில் மிக விருப்பம் கொண்டவர்கள். சோம்பல் என்பது இவர்களிடம் இருக்காது. உண்மையையே பேச விரும்புபவர். பார்ப்பதற்கு சற்று கடினமானவராக தோன்றினாலும் மனதளவில் மிகவும் இரக்கம் உள்ளவர். ஸங்கீதம் முதலான கலைகளில் மிகவும் நாட்டம் கொண்டவர்கள். இவர்கள் விஷயத்தில் தெய்வங்களும் மனிதர்களும்

மிகவும் அனுகூலமாக இருப்பர். அநேகமாக, இவர்கள் யாவரிடமும் அன்புடன் நடந்து கொள்ளும் மனப்பான்மை கொண்டவர்கள். ஹஸ்த நக்ஷத்ரக்காரர்களை நம்பிச் சென்றோமானால் நம்மை கைவிட மாட்டார்கள். இவர்களது வாழ்க்கைமுறை உயர்வு தாழ்வு கலந்ததாக இருக்கும். எதையும் ஸமாளிக்கும் தன்மை இவர்களிடம் உண்டு. இவர்களிடம் தவறுதலாக நடந்து கொண்டால் மிகவும் தண்டித்து விடுவார்கள். கோபம் என்பது இவர்களுடன் பிறந்தது. தான் நினைத்ததை ஸாதிப்பதில் மிகவும் துணிவு கொண்டிருப்பர். சரியான சூழ்நிலையில் இவர்கள் வளர வேண்டியது மிக அவச்யமாகும். இவர்கள் சூரியனை உபாஸித்து, மிகவும் மேன்மைகளை அடைய முடியும்.

எவன் ஒருவன் தனக்கு அதிகமான வருவாய் விரும்புகிறானோ அவன் ஹஸ்த நக்ஷத்ரத்தில் அக்ன்யா தானம் செய்து கொள்ள வேண்டும் என சொல்லியுள்ளது. ஹஸ்த நக்ஷத்ரத்தில் பொதுவாக தொடங்கும் கார்யங்கள் மிக உயர்வுடன் இருக்கும். ■


## அறிவிப்பு

ஸ்ரீ ஹரி :

**குருஜி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் மிஷன்**

சென்னை - 600 083

## மதுரமுரளி வருட சந்தா

''மதுரமுரளி'' க்கான வருட சந்தா ஜூன் '98 இதமுடன் முடிவடைகிறது.

***"குருஜி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் மிஷன்"*** என்னும் பெயரில் மட்டுமே ரொக்கம் / M.O. / காசோலை / DDயாக ரூ. 60/-ஐ தங்கள் பெயர், முகவரி, சந்தா எண், தொலைபேசி எண் உள்ளிட்ட விவரங்களுடன் **உடனே** அனுப்பி வைக்க வேண்டுகிறோம்.

அனுப்ப வேண்டிய முகவரி :

மதுரமுரளி,

திரு. V. சங்கரன்,

5 / 3, MIG Flats, பி.டி. ராஜன் சாலை,

கே.கே. நகர், சென்னை - 600 078.

Phone No : 484 0527

# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிகள் அளித்த பதில்கள் - தொடர்ச்சி

*கேள்வி : "பகவானிடம் நான் தான் பூரணமாக சரணாகதி அடைந்து விட்டேனே, ஏன் என்னுடைய ப்ரார்த்தனைகளை எல்லாம் பகவான் செவி சாய்க்கவில்லை?" என்று பலர் கேட்கிறார்களே. இதற்கு தங்கள் பதில் என்ன?*

ஸ்ரீ ஸ்வாமிகள் : நாம் நினைப்பதெல்லாம் நடப்பதற்காக செய்வதல்ல சரணாகதி. பகவானுடைய ஸங்கல்பத்தின்படி நம்மை நடத்திச் செல்வதற்கு நாம் அனுகூலமாக இருப்பதே உண்மையான சரணாகதியின் லக்ஷணமாகும்.

*கேள்வி : அநேக மஹாத்மாக்களுடன் உடன் இருப்பவர்கள் அப்படி ஒன்றும் ஆத்ம குணங்களுடன் இருப்பதில்லையே? அதற்கு காரணம் என்ன?*

பதில் : ஒரு மஹாராஜா, பட்டு மெத்தையில் படுத்துக் கொள்ளலாம், சப்ரம், சாமரம் முதலிய உபசாரங்களை ஏற்றுக் கொள்ளலாம். பெரிய அரண்மனையில் ஸகல வசதிகளுடன் ஸுக போகங்களுடன் வாழலாம் என்று கூறுகின்றது ராஜ தர்மம். இதற்கு காரணம் என்ன? எந்த நேரத்திலும், யுத்தம் என்று வந்துவிட்டால் தன்னுடைய தேசத்திற்காக, ஒரு க்ஷணத்தில் யுத்த களத்தில் உயிரை விடவும் அவனுக்கு நேரிடும்.

ஆகவே, ஒரு மஹாராஜாவின் வாழ்க்கை என்பது, பல ஆபத்துகளுக்கு நடுவில் ஸுக போகங்களுடன் கூடியது போல, ரோஜா எப்படி பல முட்களுக்கு நடுவில் மிகவும் அழகாகவும் வாஸனையுடன் இருக்கின்றதோ அதுபோல, மஹாத்மாக்களைச் சுற்றி இருப்பவர்கள் எப்படி இருந்த போதிலும், அதனால் அவர் பாதிக்கப்படாமல் அவர் தனித்து பவித்ரமாக இருப்பது அவரது லக்ஷணமாகும். தாமரை சேற்றின் நடுவில் இருந்தாலும் அது எப்படி தனி அழகுடன் பவித்ரமாக இருக்கின்றதோ, அது போல மஹாத்மாக்கள் விளங்குகின்றனர்.

*கேள்வி : ஆன்மீக சாதனை செய்து வருபவர்கள், க்ஷேத்ராடனங்கள் போன்றவற்றை மேற்கொள்வதால் அவர்களின் சாதனைகளுக்குத் தடை ஏற்படுகின்றதே. ஆகவே, அவர்கள் க்ஷேத்ராடனங்கள் மேற்கொள்வது அவசியமா?*

பதில் : ப்ருந்தாவனம், காசி, கயா போன்ற க்ஷேத்ரங்களில் இறைவனின் ஸாந்நித்யம் நிறைந்து காணப்படுவதாய் உள்ளன. ஶ்ரத்தையோடு தீர்த்த யாத்திரை, க்ஷேத்ராடனங்கள் செல்வதால் சிறிது காலம் சாதனைகளுக்குத் தடை ஏற்பட்டாலும் பரவாயில்லை. அவர்களுக்கு அந்த க்ஷேத்ரத்தின் மஹிமையால் உயர்ந்த பலன்கள் ஸித்திக்கும். ஆனால், இது போன்ற க்ஷேத்ரங்களுக்குச் செல்லும் பலர் இதை ஒரு காரணமாக வைத்துக் கொண்டு நான்கு புது வெளியூரைப் பார்க்கலாம் என்று நாடோடி போல் சென்று வருவதால் அவர்களுக்கு அல்ப பலன்கள் மட்டுமே ஸித்திக்கும்.

*கேள்வி : பல மஹாத்மாக்கள், பாகவதத்தில், ராமாயணத்தில் சொல்லியது தவிர அநேக க்ருஷ்ண லீலைகளையும், ராம லீலைகளையும் வர்ணித்திருக்கிறார்களே. அதெல்லாம், அவர்கள் கற்பனையா அல்லது உண்மையா?*

பதில் : கவிஞர்கள் அனைவரும் மஹாத்மாக்கள் ஆக மாட்டார்கள். ஆனால், பல மஹாத்மாக்கள் சிறந்த கவிஞர்களாகவும் உயர்ந்த ஸங்கீத ஞானத்துடன் கூடியவர்களாகவும் இருந்துள்ளார்கள். மஹாத்மாக்களின் வார்த்தைகளிலிருந்து அபரமான வார்த்தை ஒன்று கூட வராது. அவர்கள் பாடிய அத்தனை லீலைகளும் அவர்கள் திருஷ்டி பட்டே பாடியவைகளாகும்.

---

ஒருவனுக்கு பசி இருக்குமானால் அவன் ஆகாரம் உட்கொள்வதினால்தான் அது தீருமே தவிர அவனுக்காக மற்றொருவர் ஆகாரம் உட்கொள்ள முடியாது. ஒருவன் சுமந்துள்ள பாரத்தின் சுமையை மற்றொருவர் வாங்கி கொள்ள முடியாது. அதுபோல், ஒவ்வொருவரும் அவர்களுக்கு இருப்பதாக தோன்றும் மாயையை அவர்கள்தான் விவேகத்தாலும் ஸாதனைகளாலும் போக்கி கொள்ள வேண்டும்.

**- விவேக சூடாமணி**

# வேத கதைகள் - 12

- தர்மக்ஞர், வாங்முக ஶார்வபௌம, மேலக்காவிரி

ப்ரஹ்மஶ்ரீ பஞ்சாபகேச ஶாஸ்திரிகள்

## மனதின் தோற்றம்

ஒரு ஸமயம், தேவர்கள், அரக்கர்கள், மனிதர்கள் இம்மூவரும் தனியாக ப்ரஹ்மாவைக் காணச் சென்றனர். முதலில் தேவர்கள், ப்ரஹ்மாவை அணுகி, வணங்கி, தங்களுக்கு ஏதாவது உபதேசம் செய்தருளுமாறு ப்ரார்த்தித்தனர். நான்முகனும் ''தா'' என்று சொல்லி இதுதான் உங்களுக்கு உபதேசம் என்றார். தேவர்களிடம் ''ப்ரஹ்மா, இதன் அர்த்தம் என்ன?'' என்று கேட்டார்.

தேவர்கள் செல்வமிக்கவர்கள். கிழத்தனமற்றவர்கள். உயர்ந்த பதவியில் உள்ளவர்கள். யாவராலும் வணங்கப்படுபவர்கள். ஆதலால் அவர்களிடம் அச்சம் என்பதே கிடையாது. தங்களுக்கு 'அடக்கமில்லை' என்று தேவர்களுக்கும் தெரிந்திருக்கிறது. அதனால், ப்ரஹ்மாவின் ''தா'' என்கிற உபதேசத்தை ''தாம்யத'' என்று எடுத்துக் கொண்டார்கள். ''தாம்யத'' என்றால் அடங்கியிருங்கள் என்று பொருள்படும்.

பிறகு அசுரர்கள் தனியாகச் சென்று ப்ரஹ்மாவை உபதேசிக்கும்படி வேண்டினர். அவர்களுக்கும் ''தா'' என்று உபதேசித்தார் ப்ரஹ்மா. அவர்களிடமும் ''உபதேசம் புரிந்ததா'' என்று கேட்டார்.

அரக்கர்கள் இயற்கையாகவே இரக்கமற்றவர்கள். பிறரை துன்புறுத்தி அதனால், தான் மகிழ்ச்சியடைவார்கள். தங்களிடமுள்ள இந்த தோஷத்தை அவர்கள் அறிந்ததனால் ப்ரஹ்மா கூறிய ''தா'' என்பதற்கு ''தயத்வம்'' என்பதாக அர்த்தம் கொண்டனர். ''தயத்வம்'' என்றால் ''ப்ராணிகளிடத்தில் இரக்கம் காட்டுங்கள்'' என்று பொருள்.

மனிதர்கள் பிறகு ப்ரஹ்மாவிடம் உபதேசிக்கும்படி வேண்டினர். அவர்களுக்கும் ''தா'' என்பதனையே ப்ரஹ்மா உபதேசித்தார். இயற்கையிலேயே மனிதர்கள் கருமிகள். கொடுப்பதில் அவர்களுக்கு நாட்டம் இருக்காது.

இவ்விதமான தங்கள் மனநிலையைப் புரிந்து கொண்டு ''தா'' என்ற சொல்லுக்கு ''தத்த'' என்று அர்த்தம் கொண்டனர். 'தத்த' என்றால் கொடு என்பது பொருள். இவ்விதம் ப்ரஹ்மா மூவருக்கும் ''தா'' என்ற ஒரே சொல்லை உபதேசித்ததை அவரவர்கள், குற்றங்களுக்கு தக்கவாறும் மனோ நிலைக்கு ஏற்றவாறும் அர்த்தம் கொண்டனர்.

காஞ்சி காமகோடி பீடத்தில், நடமாடும் தெய்வமாகத் தோன்றி அதிஷ்டான நிலையை அடைந்த ஸ்ரீ ஸ்ரீ மஹா ஸ்வாமிகள், *''மைத்ரீம் பஜத''* என்று வட மொழியில் ஒரு கீர்த்தனம் இயற்றியிருக்கிறார்கள். இந்தக் கீர்த்தனம், 'பாரத ரத்னா' எம்.எஸ். சுப்பலக்ஷ்மி அவர்களால், ஐ.நா. சபையில் பாடப்பட்டது. இந்த கீர்த்தனம், இந்த கதையை மனதிற் கொண்டு *''தாம்யத, தத்த, தயத்வம் ஜனதா: ஸ்ரேயோ பூயாத் ஸகல ஜநா:''* என்று அமைக்கப்பட்டுள்ளது.

இந்த வேதக் கதை தெரிந்தால்தான் இந்த கீர்த்தனத்தின் கருத்தை நம்மால் நன்கு அறியமுடியும். இந்த வேத கதை ஶுக்ல யஜுர் வேதத்தில் உள்ளது. ■

---

*சகதியில் விழுந்து தவிக்கும் ஒருவனுக்கு மேலிருந்து கைகொடுத்து உதவி செய்து அவனை எப்படியாவது மேலே கொண்டு வர பார்க்கிறார் ஒருவர். மாட்டி கொண்டவனும் சகதியிலிருந்து விடுபட தன்னால் முடிந்த ப்ரயத்தனங்களை செய்து தன்னை கரை சேர்ப்பவருக்கு அனுகூலமாக இருக்க வேண்டும். குறைந்தபட்சம் எதிர்மறையான கார்யத்திலாவது ஈடுபடாமல் இருக்கவேண்டும். அதுபோல், குருவானவர் நம்மை ஸம்ஸாரத்திலிருந்து கரையேற்றுவதற்காக பல விதங்களில் ப்ரயத்தனப்படுகின்றார். நாம் அதற்கு அனுகூலமாக இல்லாவிடினும் ப்ரதிகூலமான கார்யங்களில் ஈடுபடலாகாது.*

**- ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள்**

Photos by : Sri R. Kalyanakrishnan

# ஸ்ரீ நாரத பக்தி ஸூத்ரம் - 4

- ப்ரஹ்மஸ்ரீ பாலக்ருஷ்ண ஶாஸ்த்ரிகள்

## ப்ரேம பக்தனின் ஸ்திதி

பக்தியின் ஸ்வரூபத்தை எடுத்துரைத்த தேவரிஷி, பக்தி ஒன்றையே தன் செல்வமாகப் பெற்ற ப்ரேம பக்தனின் நிலையை அடுத்தபடியாக விவரிக்கிறார். பக்தனின் நிலையை எடுத்துச் சொல்வதாலேயே அனுபவ ரூபமான பக்தியின் மேன்மையை உணர்த்த முடிகிறது.

*யல்லப்த்வா புமான் ஸித்தோ பவதி;*
*அம்ருதோ பவதி; த்ருப்தோ பவதி* *// 4 //*

*யத் ப்ராப்ய ந கிஞ்சித் வாஞ்சதி ந ஶோசதி;*
*ந த்வேஷ்டி ந ரமதே; நோத்ஸாஹீ பவதி* *// 5 //*

*யஜ்ஜ்ஞாத்வா மத்தோ பவதி;*
*ஸ்தப்தோ பவதி; ஆத்மாராமோ பவதி* *// 6 //*

புமான் - மனிதன், யல்லப்த்வா - எந்த பக்தியை அடைந்து, ஸித்தோ பவதி - ஸித்தனாக ஆகிறானோ, அம்ருதோ பவதி - அழிவற்றவனாய் ஆகிறானோ, த்ருப்தோ பவதி - த்ருப்தி அடைந்தவனாய் ஆகிறானோ,

யத் ப்ராப்ய - எந்த பக்தியை அடைந்து, ந கிஞ்சித் வாஞ்சதி - எதையும் விரும்புவதில்லையோ, ந ஶோசதி - எதற்கும் வருந்துவதில்லையோ, ந த்வேஷ்டி - எதையும் வெறுப்பதில்லையோ, ந ரமதே - ஏதோடும் ரமிப்பதில்லையோ, நோத்ஸாஹீ பவதி - உலக விஷயங்கள் எதிலும் ஆர்வம் காட்டுவதில்லையோ.

யத் ஜ்ஞாத்வா - எந்த பக்தியை அடைந்து, மத்தோ பவதி - உன்மத்தனாய் ஆகிறானோ, ஸ்தப்தோ பவதி - ஶாந்தனாய் இருக்கிறானோ, ஆத்மாராமோ - ஆத்மாராமனாய் ஆவானோ.

இந்த மூன்று ஸூத்ரங்களாலும் பக்தனின் லக்ஷணங்கள் குறிப்பிடப்படுகின்றன. ஸூத்ரத்திலுள்ள 'புமான்' எனும் பதம், பக்தியில் அனைவரும் அதிகாரி என்பதையே மறுபடியும் நினைவுபடுத்துகிறது. 'ஸித்தோ பவதி' - 'ஸித்தனாக ஆகிறான்'. ஸித்தியை அடைந்தவனை ஸித்தன் என பொதுவாகக் குறிப்பிடுகிறோம்.

ஆனால் யோக ஸாதனைகளால் பெறப்படும் ஸித்திகளை இங்கு குறிப்பிடவில்லை. பகவானிடம் நீங்காத பற்று கொண்டவன், எந்த ஸித்தியையும் விரும்புவதில்லை. அவைகளை, பக்தி மார்க்கத்திற்கு இடையூறாகவே பக்தன் நினைக்கிறான். ஸ்ரீ பகவானும் அவ்வாறே,

*''அந்தராயான் வதந்த்யேதா: யுஞ்ஜதோ யோகமுத்தமம்*
*மயா ஸம்பத்யமானஸ்ய காலக்ஷபண ஹேதவ:''*

''வீணாக காலத்தை கழிப்பதற்குக் காரணமான இந்த ஸித்திகள், யோகத்தில் ஈடுபட்டு என்னிடம் ஒன்றியிருப்பவனுக்கு இடையூறுகள் என்றே கூறுகின்றனர்'' என உத்தவனுக்கு உபதேசிக்கிறார். எனவே, ஸித்தன் என்பதற்கு அடைய வேண்டியதை அடைந்தவன் என்றே பொருள். அவனது மனம் வேறு ஒரு பொருளை அடைய வேண்டுமென்று ஏங்குவதே இல்லை. பக்திக்கு மேற்பட்ட ஸுகமோ, லாபமோ ஏதும் இல்லாததால் வேறு எதிலும் அவனுக்கு விருப்பம் ஏற்படுவதே இல்லை. உண்மையான பக்தியை அனுபவிக்காத மனிதனின் மனதில் நிறைவு இல்லாததால் ஏதாவது குறை இருந்து கொண்டே இருக்கின்றது. தனக்கு கிடைக்காத ஸுகத்திற்காக, லாபத்திற்காக மனது ஏங்கி தவிக்கிறது. மனதில் எண்ணற்ற ஆசைகள். ஆனால், பக்தனோ அடைய வேண்டியதை அடைந்து பூர்ணனாக இருப்பதால், எங்கும் எப்பொழுதும் ஆனந்த வெள்ளத்திலேயே இருக்கிறான்.

*''பக்திம் லப்தவத: ஸாதோ: கிமன்யதவசிஷ்யதே।*
*மய்யனந்த குணே ப்ரஹ்மண்யானந்தானு பவாத்மனி॥*

*(ஸ்ரீமத் பாகவதம்)*

அவன் பெறவேண்டியதோ, அடைய வேண்டியதோ ஏதும் இல்லை. அவனுக்கு எந்த குறையுமில்லை. வாழ்க்கையில், எளிமையினால், ஏழ்மையில் இருந்தாலும் உள்ளத்தில் ஹரி பக்தி குடிகொண்டு இருப்பதால் அவனே தன்யன்.

அடுத்து, 'அம்ருதோ பவதி' - 'அழிவற்றவனாய் ஆகிறான்' என்கிறார். பக்தி லபித்தவன் ம்ருத்யுவின் பிடியில் அகப்படுவதில்லை. மறுபிறவிக்கு காரணமான உலக இச்சைகள் அவன் உள்ளத்தில் இருப்பதில்லை. உள்ளத்தை பகவானுக்கே இருப்பிடமாக்கிய அவன், பலவித இன்னல்களுக்கு இருப்பிடமான ப்ராக்ருத சரீரத்தை உதறிச் செல்லும் நாளை ஆர்வமுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறான். பிறப்பெடுத்தவர்களுக்கெல்லாம் உள்ள நியதி என்பதால் அவனும் ஐம்பெரும் பூதங்களின் கலவையான உடலை நீக்கினாலும் அப்பொழுது, பகவான் தானே வந்து *'நயாமி பரமாம் கதிம்'* என்று அவனைத்

தன்னிடம் அழைத்துச் செல்கிறான். யமன் தலைகுனிய, யமன் தலையில் பக்தன் தன் பதம் வைத்து எம்பெருமான் பதத்தை அடையும் அழகை துருவ சரித்திரத்தில் பார்க்கிறோம். உலகத்தவர் பார்வையில் பக்தனுக்கும் மரணம் என்பது இருந்தாலும், அவனைப் பொறுத்தவரை அது மங்களமானதாகவே ஆகிறது. பெரிய இடத்தில் உயர்ந்த வரனுக்கு மாலையிட்ட மங்கை கல்யாணமாகி புக்ககத்திற்கு செல்வதுபோல், மனநிறைவுடன் உடலை நீத்து, பகவானுடன் ஒன்றியிருக்கும் பேரமுத நிலையை அடைகிறான். எனவே, அவனுக்கு அழிவு என்பது கிடையாது.

அடுத்து, ***'த்ருப்தோ பவதி'***. 'த்ருப்தியடைந்தவன் ஆகிறான்' என்கிறார். புலன்கள் அடங்காதவரையில் வாழ்க்கையில் எது கிடைத்தாலும், எவ்வளவு கிடைத்தாலும் த்ருப்தி மட்டும் ஏற்படுவதே இல்லை. எவ்வளவு அனுபவித்தாலும் மறுபடியும், மறுபடியும் புலன்கள் அந்த விஷயங்களை நோக்கியே ப்ரவ்ருத்திக்கின்றன. உள்ளத்தில் பேராசையும், பொறாமையும் குடிகொண்டவனுக்கு தனக்கு கிடைத்ததில் த்ருப்தி ஏற்படாமல், கிடைக்காததை நோக்கியே ஏக்கம் ஏற்படுகிறது. உலகையே கட்டி ஆண்ட பேரரசர்களும் கூட, தான் பெற்ற செல்வத்தாலோ, ஸுகத்தாலோ த்ருப்தியடைந்ததாய் தெரியவில்லை. ஒன்று கிடைத்தாலும் அதற்கு மேல் உள்ளது கிடைக்கவில்லையே என்ற குறையே மிஞ்சுகிறது.

*''பத்து கிட்டுகில் நூறு மதியென்னும்*
*சதமாகில் ஸஹஸ்ரம் மதியென்னும்*
*ஆயிரம் பணம் கையில் உண்டாகும்போல்*
*அயுதமாகிலாச்சர்ய மென்னதும்''* என்கிறார் பக்த பூந்தானம்.

தன் நிலையில் நிறைவு பெறாமல், தன்னைவிட மற்றவர்கள் அதிகமாய் ஸுகத்தில் இருப்பதாய் எண்ணி ஏங்கித் தவிக்கிறான். மற்றவர்களிடமும் எவ்வளவு குறை இருக்கிறது என புரிந்து கொள்வதில்லை. எவ்வளவு விஷய ஸுகங்களை அனுபவித்தாலும் கடைசி மூச்சு விடும் வரை த்ருப்தி ஏற்படாமலேயே 'எதைப் பெரிதாய் பெற்று விட்டோம்'' என்ற அத்ருப்தியிலேயே கடைசீ மூச்சு பிரிகிறது. த்ருப்திக்கான சரியான வழி அவனுக்கு புலப்படவில்லை. அதற்கான வழி பக்தி ஒன்றே என்பதால் பக்தியை அடைந்தவனே த்ருப்தியடைந்தவன் ஆகிறான். ஸ்ரீ க்ருஷ்ண சரண கமல ஸுகந்தத்தில் அமிழ்ந்து இருக்கும் பொழுதுதான் மனது நிறைந்து உண்மையான த்ருப்தியை அனுபவிக்க முடிகிறது. அந்த அனுபவத்தில் புலன்கள் அனைத்தும் அடங்கி, சரீரமும்

பகவத் மயமாய் ஆகிவிடுகிறது. முக்கரணங்களாலும் பகவத் பக்தியில் திளைத்திருக்கும் பொழுது உலக விஷயங்களில் கிடைக்காத த்ருப்தி கிடைக்கிறது. அபரிமிதமான பக்தியாகிய அமுதக் கடலில் விளையாடிக் கொண்டிருக்கும் ஒருவன் பரிமிதமான உலக விஷயமாகிய குட்டையில் உள்ள சேற்றில் புரள்வானா? அகண்டமான, பூர்ணமான, ஆனந்தக் கடலான, பகவானிடம் கிடைக்கும் த்ருப்தி, கண்டமான, அல்பமான, துக்கத்தை கொடுக்கும் விஷயங்களில் ஈடுபடச் செய்யுமா? எனவே, 'பக்தியை அடைந்தவன் த்ருப்தியடைந்தவன் ஆகிறான்' என்கிறார்.

***'ந கிஞ்சித் வாஞ்சதி'*** 'பக்தியையடைந்தவன் எதையும் சிறிதும் விரும்புவதில்லை' என்று மேலும் தொடர்கிறார் ப்ரஹ்மகுமாரர். பலவிதமான விருப்பங்களுக்கு விளை நிலமாய் இருக்கக்கூடியது மனிதனின் மனம். அவனது செயல்களெல்லாம் மனதிலுள்ள ஆசைகளை ஒட்டியே இருக்கிறது. வைதீக கார்யமானாலும், லௌகீக கார்யமானாலும் ஏதாவது பலனை எதிர்பார்த்தே செய்கிறான். ஆயுள், ஆரோக்யம், ஐச்வர்யம் என விருப்பங்களின் வரிசை நீண்டு கொண்டே செல்கிறது. விரும்பியபடி கிடைக்கவில்லையெனில் வருந்துகிறான். ஆசைப்பட்டு எதிர்பார்த்தது கிடைக்கவில்லையே என ஏமாற்றமடைகிறான். ஏமாற்றத்தை ஏற்றுக் கொள்ள முடியாமல் நினைத்து நினைத்து நொந்து போகிறான்.

எதிர்பார்ப்புக்கு எதிர்மறையாக கிடைத்துவிட்டாலோ கேட்கவே வேண்டாம். அதே போல், தனக்கு வேண்டியதை செய்யக் கூடியவர்கள் எனில் அவர்களிடம் ப்ரியம் காட்டுகிறான். தன்னலம் நிறைவேறுவதைப் பொறுத்தே மற்றவர்களை நல்லவர்கள் என்றும் கெட்டவர்கள் என்றும் தீர்மானிக்கிறான். மற்றவர்களின் பொதுவான நற்குணங்களை போற்றுவதில்லை. தன்னலத்துக்கு உபயோகப்படாதவர்களை எதிரியாய் எண்ணி வெறுக்கிறான், தூற்றுகிறான். உலக விஷயங்களிலேயே ஈடுபட்டிருக்கும் இவன் அத்தகைய மக்களிடமே பழகி, அந்த கூட்டத்திலேயே இருந்து, அதைப் பற்றியே பேசி, பகட்டுப் பொருள்களில் மனதை அலையவிட்டு, பின் விளைவுகளை நினைத்துப் பார்க்காமல் புலன்களின் ஸுகத்திலேயே நாட்டம் கொண்டு உத்ஸாஹமாய் பொழுது போக்குகிறான்.

ஆனால், எப்பொழுதும் த்ருப்தனாய், குறைவற்றவனாய் இருக்கும் பக்தனோ, பக்தியாகிய பெருஞ் செல்வம் பெற்றதனால் மேற்கூறிய நிலைக்கு முற்றிலும் மாறுபட்டு இருக்கிறான். அவனது நிலையை சிறிது பார்ப்போம்.

– தொடரும்

# சாந்தோக்யோபநிஷத்

ஸத்யகாமன் என்ற ஜாபாலன், தன் தாயாகிய ஜபாலாவையணுகி ''அம்மா நான் குருகுலத்தில் அத்யயனம் செய்ய விரும்புகின்றேன். நான் என்ன கோத்ரம்?'' என்று கேட்டான். உடனே அவனது தாயார், ''அப்பா! என்ன கோத்ரம் நீ என்று எனக்குத் தெரியாது. என் சிறிய வயதில் பலவிதமான பணிகளில் ஈடுபட்டிருந்தபொழுது, உன்னைப்பெற்றேன். (என் சிறிய வயதில், கணவன் வீட்டில், அதிதிகளை ஆராதித்தல் முதலிய கைங்கர்யங்களில் ஈடுபட்டிருந்த பொழுது கோத்திரத்தைக் கேட்டுத் தெரிந்து கொள்ளாமல் போனேன். உன்னைக் கருத்தரித்த பின் உன் தகப்பனாரோ இறந்துவிட்டார். நான் அநாதையாகிவிட்டேன். அதனால் உன் கோத்ரம் எனக்குத் தெரியாது என்பது ஆதிசங்கரர் பாஷ்யம்.) ''கோத்ரம் என்ன என்று தெரிந்து கொள்ளவில்லை. என் பெயர் ஜபாலா. உன் பெயர் ஸத்யகாமன். இதையே குருகுலத்தில் சொல்வாய்'' என்றாள்.

ஸத்யகாமனும் ஹாரித்ருமர் என்ற கௌதம ரிஷியிடம் சென்று, ''பெருமை வாய்ந்த தங்களிடம் ப்ரஹ்மசாரியாக இருக்க விரும்பி தங்களை வந்தடைந்தேன்'' என்றான். உடனே கௌதமர், ''குழந்தாய்! நீ எந்த கோத்திரத்தைச் சேர்ந்தவன்?'' என்று ஸத்யகாமனைக் கேட்டார். அதற்கு ஸத்யகாமன், ''ஐயா! நான் என்ன கோத்திரம் என்று அறியேன்!'' என்று தன் தாய் கூறியதைக் கூறி, ''என் தாயார் பெயர் ஜபாலா, என் பெயர் ஸத்யகாமன். ஆகையால் நான் ஸத்யகாம ஜாபாலன்'' என்று பதில் கூறினான்.

உடனே கௌதமர், ''இங்ஙனம் உண்மையைத் தெளிவுபடக் கூறுபவனைப் ப்ராஹ்மணனல்ல என்று சொல்வது சரியன்று. சித்தம் அழகியவனே! ஸமித்தைக் கொண்டுவா. உனக்கு உபநயனம் செய்விக்கிறேன். நீ ஸத்யத்தினின்று விலகவில்லை'' என்று கூறி அவனுக்கு உபநயனம் செய்வித்தார். பிறகு, இளைத்தும் பலமில்லாததுமான நானூறு பசுக்களைப் தேர்ந்தெடுத்து ''ஸௌம்ய! இவைகளை ஓட்டிவா'' என்றார். அவற்றை ஓட்டிக் கொண்டு கிளம்புகையில் ஸத்யகாமன், ''இப்பசுக்களை ஆயிரமாக ஆக்காமல் திரும்பேன்'' என்று உறுதி கொண்டான். எப்பொழுது அக்கூட்டம் ஆயிரமாக ஆயிற்றோ அதுவரையில், (பல வருஷங்கள்) அவன் வெளியே வசித்தான்.

இவனிடம் இரக்கப்பட்டு அக்கூட்டத்தில் உள்ள ஒரு ரிஷபம் ஒருநாள் அவனுக்கு ப்ரஹ்ம வித்தையை உபதேசித்தது. மறுநாள் அக்னி, அதற்கு மறுநாள் அன்னம், அதற்கு மறுநாள் நீர்க்கோழியும் உபதேசித்தன.

பின் குருகுலத்திற்கு மீண்டும் வந்து சேர்ந்தான் ஸத்யகாமன். குருவானவர் ''ஸத்யகாமா'' என்று அழைத்தார். ஸத்யகாமனும் ஆசார்யனுடைய ஸமீபத்தை அடைந்தான். குரு அவனிடம், ''ஸத்யகாமா! நீ ப்ரஹ்மத்தை அறிந்தவனாக விளங்குகிறாய். உனக்கு உபதேசித்தது யார்? என்று கேட்டார். (இந்த்ரியங்களில் தெளிவுடையவனாகவும் சிரித்த முகமுடையவனாகவும், கவலையற்றவனாகவும், திருப்தி அடைந்தவனாகவும், ப்ரஹ்மத்தை அறிந்தவன் இருப்பான். இந்த லக்ஷணங்களை அவனிடம் கண்டதால் குரு இங்ஙனம் கூறினார் - ஆதி சங்கரர் பாஷ்யம்) அதற்கு ஸத்யகாமன், ''உபதேசித்தவர்கள் மனிதர்களல்லர். மேலும், தாங்கள்தான் எனக்கு என் விடாய் தீர உபதேசித்தருள வேண்டும். குருவிடமிருந்து அறிந்த வித்தையே சிறந்த பயன் தருவதாகும்'' என்று உரைத்தான். பிறகு கௌதமர், ஜாபால ஸத்யகாமனுக்கு, ப்ரஹ்மவித்யையை கொஞ்சமும் விடாமல் உபதேசித்தார்.

காமலர் என்பவரின் புத்ரனான உபகோஸலன், ஜாபால ஸத்யகாமரிடம் சிஷ்யனாகி ப்ரஹ்மசர்யத்தை அனுஷ்டித்தான். அவருடைய அக்னியை பன்னிரண்டு வருஷங்கள் போற்றி வந்தான். ஸத்யகாமர் உபகோஸலனைத் தவிர மற்ற ஶிஷ்யர்களுக்கு அத்யயனத்தைப் பூர்த்தி செய்வித்தார்.

ஸத்யகாமரிடம், அவர் மனைவி, ''இந்த ப்ரஹ்மசாரி ஶ்ரத்தையுடன் செவ்வையாக அக்னிகளை போற்றி வந்திருக்கிறான். அவனுக்கு நீங்கள் உபதேசித்து பூர்த்தியாக்கவில்லை. அக்னிகள் உங்களை வெறுக்காமல் இருக்கும் பொருட்டு இவனுக்கு நீங்கள் உபதேசிக்க வேண்டும்'' என்றாள். ஆனாலும், அவனுக்கு உபதேசம் செய்யாமலேயே அவர் வெளியே சென்று விட்டார்.

சிஷ்யனான உபகோஸலன் மனோவ்யாதியால் சாப்பாடு வேண்டாமென்றிருக்கலானான். அவனை நோக்கி குருபத்னி பரிவுடன், ''உபகோஸலா, ஏன் உணவருந்தாமல் இருக்கிறாய்'' என்று கேட்டாள். அவன் ''தாயே! இவ்வுடல் கொண்ட இவனிடத்தில் பல ஆசைகள் பலவாறாய்க் குழப்பிக் கொண்டிருக்கின்றன. மனோவ்யாதியால் பீடிக்கப்பட்டவனாயிருக்கிறேன். அதனால் சாப்பிடவில்லை'' என்றான்.




அந்த ஸமயத்தில், அக்னிகள் ''இந்த ப்ரஹ்மசாரி ஶ்ரத்தையுடன் நம்மை காப்பாற்றியிருக்கிறான். இவனுக்கு நாமே உபதேசிப்போம்'' என்று தங்களுக்குள் பேசிக்கொண்டு அவனுக்கு உபதேசித்தன. ஆனால், முழுவதும் உபதேசிக்காமல் குருவிடமே உபதேசம் பூர்த்தியாக வேண்டும் என்பதற்காக அவனை குருவிடம் மீதியை கேட்டுக் கொள்ளும்படி கூறினர்.

குருகுலத்திற்கு திரும்பிய ஆசார்யர், உபகோசலனைப் பார்த்து ஆச்சர்யப்பட்டு, அன்புடன், ''உபகோஸலா! ப்ரஹ்ம ஞானியின் முகத்தைப்போல் உன் முகம் ப்ரகாசிக்கிறதே! உனக்கு யார் உபதேசித்தது?'' என்றார். உடனே உபகோஸலன் வினயத்துடன், ''எனக்கு யார் உபதேசிப்பார்கள். இந்த அக்னிகள் முன்பு வேறு விதமாக இருந்தன'' என்று அக்னிகள் உபதேசித்ததை குறிப்பால் கூறினான். ஆசார்யர் அவனிடம், ''இந்த அக்னிகள் உனக்கு என்ன உபதேசித்தன?'' என்று கேட்டார். உபகோஸலன் அக்னிகள் என்ன உபதேசித்தனவோ அவற்றை அப்படியே கூறினான்.

அதைக் கேட்டு ஆசார்யர், ''அவை உலகங்களைப் பற்றியே கூறியிருக்கின்றன. எப்படி தாமரை இலையில் தண்ணீர் ஒட்டுவதில்லையோ அப்படி எந்த ஞானத்தை அடைந்தவனிடம் பாவச் செயல் ஒட்டாதோ அதை நான் உனக்கு உபதேசிக்கிறேன். கண்ணினுள் எந்த புருஷன் ஸாக்ஷியாக விளங்குகிறானோ அவனே ஆத்மா. அந்த ஆத்மா மரணமற்றது. பயமற்றது. கண்ணினுள் நெய்யையோ நீரையோ விட்டால் பக்கத்தில் வழிந்து ஓடிப்போகிறது. அதுபோல், ஆத்மாவை எதுவும் பற்றாது. இப்படி ஞானத்தை அடைந்த ப்ரஹ்ம ஞானிகள் உடலை நீத்தபின் அவர்களுக்குப் ப்ரேத க்ரியைகள் செய்தாலும், செய்யாவிட்டாலும், ஒளி நிறைந்த கதியையே அடைகிறார்கள். (அர்சிராதி மார்க்கம்) அங்கு ஒரு புருஷன் உளன், அந்த புருஷன் இவர்களை ப்ரஹ்மத்திடம் சேர்ப்பிக்கிறான். இது தேவமார்க்கம், ப்ரஹ்ம மார்க்கம். இவ்வழியை அடைந்தவர் மனுஷ்ய ஶ்ருஷ்டியாகிய சுழலில் மீண்டும் வருவதில்லை. மீண்டும் வருவதில்லை?'' என்று உபதேசித்தருளினார்.

- பாலாஜி



# பாலகர்களுக்கு ஒரு கதை-7

## விவேகமுள்ளவன் பிழைப்பான்

ஒரு ஸமயம், க்ருஷ்ணதேவராயர், விஜய நகர ஸாம்ராஜ்யத்தை ராஜ்ய பரிபாலனம் செய்து வந்தார். அவருடைய அரசவையில்தான் தெனாலிராமன் என்ற ப்ரஸித்தமான விகடகவி இருந்து வந்தார். அவர், தான் அங்கம் வகித்து வந்த விஜய நகர ஸாம்ராஜ்யத்திற்கு டெல்லியை ஆண்டு வந்த அக்பர் அவர்களின் உதவியை நாட விரும்பினார். டெல்லி சென்ற தெனாலிராமனால் ஸுலபத்தில் அக்பரைக் காண முடியவில்லை. அதற்கான உபாயத்தை ஆலோசனை செய்து வந்தார்.

நித்யம் அக்பர், காலையில் குதிரை மீது உலா வரும் வழக்கம் கொண்டவர் என்பதை தெனாலிராமன் தெரிந்து கொண்டார். அது போலவே, அக்பர் நித்யம் நகரத்தின் எந்தப் பகுதியில் உலா வருகிறார் என்பதையும் தெரிந்து வைத்துக் கொண்டார்.

ஒரு நாள் அப்படி அக்பர் காலையில் உலா வரும் வேளையில் தெனாலிராமன் ஒரு மாமரத்தின் கன்று ஒன்றை நட்டுக் கொண்டிருந்தார். அதைக்கண்ட அக்பர் நகைத்தபடியே தெனாலிராமனைப் பார்த்து, ''தங்களுக்கோ மிகவும் வயதாகிவிட்டது. இந்த மரம் வளர்ந்து, காய்த்து, பழுக்கும் வரை தாங்கள் இருக்கப் போகிறீர்களா என்ன? அப்படியிருக்கையில், தாங்கள் எதற்காக இவ்வளவு சிரமப்பட்டு மாங்கன்றை நட வேண்டும்? என்று கேட்டார்.

அதற்கு தெனாலிராமனோ, 'நம்முடைய மூத்தோர்கள் இப்படி எண்ணியிருந்தால் நாம் இன்று மாம்பழம் சாப்பிட முடியுமா என்ன?' என்று பதிலுக்கு வினவினார். இதைக் கேட்ட அக்பர் மிகவும் ஸந்தோஷித்து பேஷ், பேஷ் என்று கூறியபடியே தெனாலிராமனை நோக்கி தங்க நாணயங்களை வீசினார். உடனே தெனாலிராமன் அக்பரை நோக்கி ''இந்த கன்றை நடுவதால் இதன் பயனை நான் அனுபவிக்க முடியாது என்று சொன்னீர்களே, இதோ கைமேல் பயன் கிடைத்துவிட்டதே'' என்று தங்கக் காசைக் காட்டியபடி கூறினார். அதற்கு அக்பர் ஸந்தோஷித்து மீண்டும் பல பொற்காசுகளைத் தூக்கி தெனாலிராமன் மீது போட்டார்.

உடனே தெனாலிராமனும், ''மாமரம் வளர்ந்து பழுத்தாலும் ஆண்டுக்கொருமுறைதான் பலன் தரும். ஆனால் அக்பரின் ஆட்சியில் மாங்கன்று கூட க்ஷணத்திற்கு க்ஷணம் பயன் தருகின்றது'' என்று

கூறினார். அதைக் கேட்ட அக்பர், அவருடைய சாதுர்யத்தைப் பாராட்டி அவரை அரசவைக்கு வரச் சொன்னார். தெனாலிராமனும் அக்பரைத் தனியே சந்தித்து, தான் வந்த விஷயத்தைக் கூறி அதற்கான உதவிகளைப் பெற்றுத் திரும்பினார். ஆகவே, விவேகம் உள்ளவன் எப்படியும் பிழைத்துக் கொள்வான் எனத் தெரிகிறது. ■

– ஸ்ரீ ஸ்வாமிகள்

## நாம ஸங்கீர்த்தனம்

ஸ்ரீ ஸ்வாமிகளின் ஆக்ஞையின் பேரில், ஒரு நாம ஸங்கீர்த்தன இளைஞர் குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்தக் குழு, ஒவ்வொரு வீடாகச் சென்று ''ஹரி நாம ஸங்கீர்த்தனம்'' செய்ய சித்தமாக உள்ளது. இந்த நாம ஸங்கீர்த்தனத்தில்,

*''ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே*
*ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே''*

என்னும் கலியை நாசம் செய்ய வல்லமை படைத்த மந்திரத்தை இரண்டு மணி நேரம் தொடர்ந்து ஜபிக்கப்படும். இதை எல்லா ஞாயிற்றுக் கிழமைகள், மற்றும் அரசாங்க விடுமுறை நாட்களில் காலை 9 மணி முதல் 11 வரை அல்லது மாலை 3 மணி முதல் 5 மணி வரை நடத்தத் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

இந்த நாம ஸங்கீர்த்தனத்திற்கு வரும் குழுவிற்காக எந்த விதமான கட்டணமும் இல்லை. பிரசாத விநியோகமோ, பணச் செலவோ கிடையாது. இதில், ஸ்த்ரீகள், புருஷர்கள் அனைவரும் கலந்து கொள்ளலாம். அக்கம் பக்கத்து வீடுகளில் உள்ள தெரிந்தவர்களையும் கலந்து கொள்ளச் சொல்லலாம். இதனை ஏற்பாடு செய்தவர்களுக்கும் கலந்து கொண்டவர்களுக்கும் உள்ள எல்லா விதமான ப்ரச்னைகளும் தீர்ந்து விடுவது ப்ரத்யக்ஷம்.

இந்த நாம ஸங்கீர்த்தனம், தங்கள் வீடுகளில் செய்ய விருப்பம் உள்ளவர்கள், தங்களின் பெயர், முழு விலாசம், நடத்த விருப்பமுள்ள தேதி, நேரம் (காலை அல்லது மாலை) என்கிற விபரங்களை முன் கூட்டியே கடிதம் எழுதி அதன் உறை மீது ''நாம ஸங்கீர்த்தனம்'' என்று எழுதி அனுப்பவும். கடிதம் மூலம் மட்டுமே தொடர்பு கொள்ளவும். தொலைபேசி மூலமாகவோ நேரிலோ ஸ்ரீ ஸ்வாமிகளை இது விஷயமாக தொடர்பு கொள்வதைத் தவிர்க்கவும்.

தபால் மூலம் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி
**குருஜி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் மிஷன்**
''ப்ரேமிக பவனம்''
24, நேதாஜி நகர், ஜாபர்கான் பேட்டை,
சென்னை - 600 083.

# ஸ்வாமிகளின் ஸம்பாஷணைகளிலிருந்து - 33

*"அஞ்சல் என்றே அருள் அருணாசலா"*

அத்வைத சித்தாந்தத்தை ஆஸேது ஹிமாசலம் ஸஞ்சாரம் செய்து மடங்களை ஸ்தாபித்து, அநேக வேதாந்த க்ரந்தங்களை முதலாக ஸ்தோத்ர க்ரந்தங்கள் வரை அனுக்ரஹித்து அருளிய நமது ஆசார்யாளான பகவத்பாதாள் பெரிய ஜீவன் முக்தர். ஒரு ஸமயம், பகவத்பாதாள் காபாலிகர்கள் வஸிக்கும் ப்ரதேசம் வழியாக ஸஞ்சாரம் செய்தார். காபாலிகர்கள் நரபலி கொடுக்கும் வழக்கம் உள்ளவர்கள். பகவத்பாதாள் ஆத்மா வேறு, சரீரம் வேறு என்று உபதேசிப்பதையும், ஜீவன் முக்தனுக்கு ஸரீரத்தில் ஏற்படும் உபாதைகள் ஆத்ம ஸ்வரூபமான அவனை பாதிக்காது என்று உபதேசித்து வருவதையும் அவர்கள் அறிந்திருந்தனர். பகவத்பாதாளை நெருங்கி, 'நீர்தான் ஆத்மா வேறு, சரீரம் வேறு' என்று கூறுகின்றீரே. ஆகவே உம்மையே நாங்கள் நரபலியாகக் கொடுக்க தீர்மானித்துள்ளோம் என்று கூறினர். பகவத்பாதாளும் மறு பேதம் கூறாமல் ஸந்தோஷமாக அவர்கள் நரபலி கொடுக்க உகந்த வகையில் சயனித்துக் கொண்டார்.

அவர்கள் நரபலி கொடுக்க இருந்த ஸமயத்தில், பகவத்பாதர்களின் முக்யமான சிஷ்யர்களில் ஒருவரான பத்மபாதருக்கு ந்ருஸிம்ம ஆவேஸம் ஏற்பட்டு காபாலிகர்களின் கொட்டத்தை அடக்கினார். அந்த ஸமயத்தில்தான் பகவத்பாதாள் *"நரஸிம்ம கராவலம்பம்"* என்ற ஸ்தோத்ரத்தை அனுக்ரஹம் செய்தார். அந்த ஸ்தோத்ரத்தில், பகவத்பாதாள் நரஸிம்மரைப் பார்த்து, என்னை காபாலிகர்களிடமிருந்து காப்பாற்றினாயே. அதற்கு உனக்கு வந்தனம்'' என்று ப்ரார்த்தித்திருந்தால் ஆசார்யாளுக்குக் கூட சரீர அபிமானம் இருக்கக் கூடுமோ என்று நமக்கு தோன்றலாம். ஆனால், பகவத்பாதாளோ, ''இதை ஒரு வ்யாஜமாக வைத்துக் கொண்டு ஸரீரத்தை விட்டுவிடலாம் என்று நினைத்தேனே. ஆனால் முடியாமல் போய்விட்டதே'' என்று ப்ரார்த்திப்பதிலிருந்து பகவத்பாதரின் உயர்ந்த நிலை நமக்குப் புரிகிறது.

அநேக மஹாத்மாக்கள் ஒரு அல்பமான விஷயத்திற்காக ஸம்ஸார பந்தத்தை விட்டுவிட்டு ஸந்யாஸத்தை மேற்கொண்டுள்ளார்கள். அப்படித்தான் ஒரு மஹான் பூஜை செய்வதற்கு அமர்ந்தார். தன்னுடைய பத்னி, பூஜை செய்யும் இடத்தை கோமியத்தால் சுத்தம் செய்யவில்லை



என்பதற்காக கோபித்துக் கொண்டு வீட்டைவிட்டு ஸந்யாஸம் மேற்கொள்ள கிளம்பினார். கிளம்பும் அவரை பின் தொடர்ந்த பத்னி, ''தாங்கள் இப்படி செய்வது நியாயமா? கோமியத்தால் சுத்தம் செய்யவில்லை என்பதற்காக நீங்கள் குடும்பத்தை விட்டுப் போகலாமா'' என்று கதறி அழுதாள். அதற்கு அந்த மஹாத்மாவோ, ''நான், என்றோ ஸம்ஸாரத்தை விட தீர்மானித்து விட்டேனே தவிர, யாரிடமும் எனக்கு எந்த கோபமும் கிடையாது. அப்படி உண்மையான கோபம் இருக்குமாயின் நான் ஸந்யாஸம் எடுத்துக் கொள்வதால்தான் என்ன பயன் கிடைக்கப் போகிறது'' என்று பதிலுரைத்தார்.

நாம் ஸம்ஸாரத்தில், எப்பேர்ப்பட்ட துக்கம் ஏற்படுமாயினும், அதற்காக நிவ்ருத்திகள் பலவிதமாக யோசித்து மான அவமானங்களை விட்டு பலவிதமான ப்ரமங்கள் நடுவிலேயும் ஸம்ஸார பந்தத்தில் உழன்று கொண்டிருக்கிறோம். மஹாத்மாக்களோ வாழ்க்கை அனுகூலமாக இருந்தால்கூட எப்பொழுது ஸம்ஸார பந்தத்தை விடுவோம் என்று சிந்தித்து வருகின்றார்கள். ஆகையால் ஞானம் என்பது யாருக்கு வரும் என்று சொல்ல முடியாது.

ஒருவன் ஸம்ஸாரத்தில் பல துக்கங்களை அனுபவிக்கிறான். அதனால் வ்ரக்தி ஏற்பட்டு பகவானைத் தேடுவான் என்பது ஒன்றும் அவஶ்யமில்லை. அதேபோல் ஒருவன் ஸர்வ சௌகர்யத்துடன் வாழ்ந்து கொண்டிருக்கிறான். ஆகவே ஒருக்காலும் இந்த ஸம்ஸாரத்தை துறக்க மாட்டான் என்று சொல்வதும் தவறு. யாருக்கு விவேகம் இருக்கின்றதோ யார் ஸம்ஸாரத்திலுள்ள ஸுக, துக்கங்களை ஆலோசித்து சிந்திக்கிறானோ, யாருக்கு உத்தம குருவும், குரு கடாக்ஷமும் கிடைக்கின்றதோ அவர்கள் ஏழையாகவும் இருக்கலாம். சுக போகியாகவும் இருக்கலாம், ப்ரம தசையிலுள்ளவர்களாகவும் இருக்கலாம். ஆனால் அவர்களே ஸம்ஸாரத்தைத் துறந்து இறைவனைத் தேட ஆரம்பிக்கிறார்கள்.

இந்த ஜன்மாவில் ஸத்குரு கிடைத்தும் அரிதான உபதேசங்களைக் கேட்டும் நாம் நம்முடைய விடுதலைக்காக ப்ரயத்தனப்படவில்லை என்றால் நாமே நம்மை அழித்துக் கொண்டவர்களாவோம். இந்த ஜன்மாவில்தான் முடியாமல் போய்விட்டது. அடுத்த ஜன்மாவில் பார்த்துக் கொள்ளலாம் என்று சிலர் நினைக்கிறார்கள். அதுவும் சரியல்ல. நம்முடைய ஹ்ருதயத்தில் உள்ள வாஸனைகளை அழியாத வரையில் எத்தனை ஜன்மம், எந்த ஜன்மம் எடுத்தாலும் நாம் இப்படியே இருப்போம். தூங்குவதற்கு முன் கருமியாக இருப்பவன் விழித்த பின்னும்

எப்படி கருமியாகவே இருக்கின்றானோ, காமுகன் எப்படி காமுகனாகவே இருக்கின்றானோ, போக்கிரி எப்படி போக்கிரியாகவே இருக்கின்றானோ அது போலவே அடுத்த ஜன்மாவில் நாம் திருந்தப் போவதில்லை. ஏனென்றால், மரணம் என்பது நீண்ட தூக்கம். அதாவது மனோலயம்தான். மனம் நாஸமாகாத வரையில் ஆனந்தம் இல்லை.

சாதாரணமாக குரங்கு மரத்தின் கிளைகளிலேயே குட்டி போடுவதைப் பார்த்திருக்கலாம். குட்டி தாயின் கர்ப்பத்திலிருந்து வெளிவந்தவுடன் தான் எங்கே கீழே விழுந்து விடுவோமோ என்ற அச்சத்தினால் அழகாக மரக்கிளையைப் பிடித்துக் கொள்ள வேண்டும் என்ற ஞானம் அதற்கு எங்கிருந்து வந்தது? அது ஏதோ ஒரு ஜன்மாவில் குரங்காக இருந்திருக்கின்றது. மீண்டும் அதே ஜன்மா வந்தவுடன் வாஸனையால் கிளையைப் பிடித்துக் கொள்கிறது. ஆகவே, மனம் நாசமாகாமல், அதாவது வாஸனை அழியாமல் ஜீவன் முக்தி நிலை ஸித்திக்காது. ஜீவன் முக்தி ஸித்திக்காத வரை ஶாந்தி என்பது வராது. எனவே பகவான், அருணாசலேஶ்வரரைப் பார்த்து ***"அஞ்சேல் என்றேயருள் அருணாசலா"*** என்கிறார்.

(தொடரும்)

**தொகுப்பு : முரளீதரதாஸன்.**

# செய்திகள்

### ஏப்ரல் 4-ந் தேதி முதல் 12-ந் தேதி வரை

ஸ்ரீ மாதுரிஸகி ஸமேத ப்ரேமிக வரதனின் வஸந்தோத்ஸவம் ப்ருந்தாவனம் ஸ்ரீ வனத்தில் சிறப்பாக நடைபெற்றது.

### ஏப்ரல் 10-ந் தேதி

பங்குனி உத்திரத்தை முன்னிட்டு திருக்குடந்தை ஸ்ரீ ஆராவமுதன் திருக்கல்யாண உத்ஸவம் நம் மிஷன் சார்பில் நடைபெற்றது.

# நடக்க இருக்கும் நிகழ்ச்சிகள்

### மே 3-ந் தேதி முதல் 10-ந் தேதி வரை

சென்னை மயிலை அப்பர் ஸ்வாமி கோவிலில் நம் ஸ்வாமிகள் ''பக்த சரித்ரம்'' பற்றி உபன்யாஸம் நிகழ்த்த இருக்கிறார்கள்.

# மதுரமுரளி

Registered as Newspaper in India

Registrar of Newspapers for India
R. No. 62828/95

Regd. No. TN/MS(S)/714/98/
WPP No. TN/MS(S)/54/98

வேணு:3 | மே 1998 | கானம்:10




'ப்ருந்தாவனத்'தில், வஸந்தோத்ஸவத்தில் நடைபெற்ற 'ராதா கல்யாண' வைபவத்தில், குதிரைமேல் பெருமாளின் 'மாப்பிள்ளை அழைப்பு' காட்சி.


Published by V. Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, 24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai 600 083 and Printed by Mrs. Sri Kalaivani of Sri Maruthy Laser Printers, 174, Peters Road, Chennai - 600 014. Editor : S. Sridhar